**O.S.No. 98/2012**

<u>பி.வா.சா.01, திரு.ராமமூர்த்தி</u>
நாள் : 03.07.2025 நேரம் : 12.25 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் இவ்ழக்கின் 1ம் பிரதிவாதியாவேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் இந்த வழக்கின் 1 , 2 வாதிகள் மற்றும் 1, 7 ,10,11 பிரதிவாதிகள், சண்முகவள்ளி ஆகியோர். மேற்படி சண்முகவள்ளி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே காலமாகிவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேற்படி சண்முகவள்ளியின் வாரிசுகள் தான் 2 முதல் 6 பிரதிவாதிகள் என்று சொன்னால் தான். 2ம் பிரதிவாதியும் காலமாகிவிட்டார். இவ்வழக்கின் 10,11 பிரதிவாதிகள் 1,4 வாதிகளாக இருந்தார்கள் என்றாலும், அதன் பின்னர் பிரதிவாதிகளாக மாற்றப்பட்டார்கள் என்று சொன்னாலும் சரிதான். மேற்படி 10,11 பிரதிவாதிகள் பிராதை ஆட்சேபித்து எதிர் வழக்குரை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 10ம் பிரதிவாதியின் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகள் தான் 21, 22 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். 11ம் பிரதிவாதியின் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகள் தான் 16 முதல் 20 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் 8, 9 பிரதிவாதிகளின் பாட்டனார் சிவஞானபாண்டியன் பெயரில் தவறாக தாவா 18 வது லக்க சொத்தை பொறுத்து பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சிவஞானபாண்டியன் இறந்துவிட்டார் என்றாலும் அவருக்கு செந்தில் என்ற ஒரே ஒரு வாரிசுதான் இருந்தார் என்றாலும், அவரும் தற்போது இறந்துவிட்டார் என்று சொன்னாலும் சரிதான். மேற்படி பட்டா தவறு என்பதால் தான் 8, 9 பிரதிவாதிகள் இந்த வழக்கில் தோன்றாதரப்பினர் ஆகிவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் 1ம் வாதி தனது மகளான 12ம் பிரதிவாதிக்கு 26.03.2007ம் தேதி 17 வது லக்க சொத்தை பொறுத்து கிரையம் எழுதி கொடுத்தது போல ஒரு ஆவணம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால்

சரிதான். 12ம் பிரதிவாதியை சேர்த்துவிட்டு மேற்படி ஆவணம் செல்லத்தக்கது அல்ல என வாதிகள் இந்த பிராதை திருத்தம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், 12ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் பொய்யாக மேற்படி ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எல்லாம் ஆவண எழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். மேற்படி ஆவணம் மோசடியாக ஏற்பட்டது என்பதால் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல, மேற்படி ஆவணம் மோசடியான ஆவணம் அல்ல. எனது தகப்பனார் பெயர் சேதுத்தேவர், தாயார் பெயர் முத்து இருளாயி. எனது தாயார் உடன் பிறந்தவர் மீனாள் ஆவார். மேற்படி மீனாளின் கணவர் பெயர் வில்லியணத்தேவர். எனது தாயாரின் தகப்பனார் பெயர் சண்முகவேல். சண்முகவேலின் உடன் பிறந்தவர் பெயர் குழந்தைவேல். இந்த வழக்கில் 42வது லக்க சொத்திற்கு தெற்கே உள்ள சொத்தை குழந்தைவேல்தேவர் 15ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 15ம் பிரதிவாதி சூரியம்மாளை இந்த வழக்கில் 42வது லக்க சொத்திற்கும் சேர்த்து அவரின் பெயரில் தவறாக பட்டா உள்ளதால் சேர்க்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி 15ம் பிரதிவாதிக்கு தவறுதலாக பட்டா ஏற்பட்டதால் தான் அவர் இந்த வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 15ம் பிரதிவாதி ஆஜராகவில்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பிறகு 13ம் பிரதிவாதி 14ம் பிரதிவாதிக்கு 28.08.2014ம் தேதி ஒத்தி ஆவணத்தை எழுதி கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தை எழுதி கொடுத்ததினால் தான் அந்த ஆவணம் செல்லத்தக்கது அல்ல என பரிகாரம் கோரியுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 17வது சொத்தில் 11ம் பிரதிவாதியும், 40வது சொத்தில் 10ம் பிரதிவாதியும் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் எந்த லக்க சொத்து

எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், ஆளுக்கு ஒரு பகுதியாக கண்டேயத்தமான முறையில் மேற்படி பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் தான் வீடு கட்டியுள்ளார்கள். எனது தகப்பனார், தாயார் சொத்துக்களுக்கு தான் இவ்வழக்கு நடைபெறுகிறது. எனது பெற்றோர்களுக்கு பாத்தியமான அனைத்து சொத்துக்களும் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் கூறுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, நாங்கள் வாய்மொழி பாகப்பிரிவினை தான் செய்துகொண்டோம். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை எந்த தேதியில், எங்கு வைத்து, யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதால் எனக்கு தேதி, இடம் நினைவில் இல்லை. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றாலும், வாய்மொழி பாகப்பிரிவினை சட்டத்தால் ஏற்றுகொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை வீட்டு மனை இடங்களாக நான் பிரிக்க முயற்சிதன் பேரிலும், தாவா சொத்துக்களுக்கு பட்டாவை எனது பெயரில் மட்டும் மாற்ற முயற்சிதன் பேரிலும் தான் இந்த வழக்கு வாதிகள் மற்றும் 10,11 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி பட்டா மாற்ற முயற்சித்த போது நேரில் 11.04.2012 ம் தேதியும், 24.04.2012 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் வாதிகள் தடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் அவ்வாறு பட்டா மாற்ற முயற்சிக்கவில்லை. 21.04.2012 ம் தேதி தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு வாதிகள் மற்றும் 10,11 பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்று சொன்னால் சரிதான், அந்த அறிவிப்பை நான் பெற்றுகொண்டு 24.04.2012 ம் தேதி நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி பதில் அறிவிப்பை நான் ஆவணமாக இந்த வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகள் தரப்பில் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.18 ஆவணம் நான் அனுப்பியது தான் என்று சொன்னால் எனக்கு அந்த அளவுக்கு எழுத படிக்க தெரியாது. நான் 5ம் வகுப்பு வரை இளஞ்செம்பூரில் அரசு தொடக்கப் பள்ளியில் படித்துள்ளேன். எனக்கு தற்போது 64 வயதாகிறது. எனது பிறந்த நாள் எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும், எனது பிறந்த தேதியை சொன்னால் வா.சா.ஆ.18 குறிப்பிட்டுள்ள உயில் ஆவணம் ஏற்பட்ட காலத்தில் நான் பிறந்துவிட்டேன் என தெரிந்துவிடும் என்பால் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பதில் அறிவிப்பில் உயில் ஆவணம் மூலம் தாவா சொத்துக்கள் கிடைத்ததாக கூறியுள்ளேன் என்றும், எதிர் வழக்குரையில் வாய்மொழியாக பாகம் கிடைத்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் நாங்கள் ஏற்கனவே தாவா சொத்துக்களை பொறுத்து வாய்மொழியாக பாகம் பிரித்துவிட்டோம், வழக்கறிஞர் அறிவிப்பை கோபத்தில் அனுப்பினேன். எனது எதிர் வழக்குரையில் எனது உடன் பிறந்த சகோதரிகள் தாவா சொத்தை பாகம் பிரித்து கேட்டு அறிவிப்பு அனுப்பியதால் கோபத்தில் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.15 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.07.03 17:23:58 +0530